# ஜீலை 18

# புனித பிரான்சிஸ் சொலானோ (1549-1610)




இவர் பக்தியுள்ளவர். கல்வி பயின்றபின் பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து குருப்பட்டம் பெற்றார். கொள்ளைநோய் காலத்தில் எல்லையற்ற இரக்கத்துடன் தெருத்தெருவாகப் போய் நோயாளிகளுக்குச் சேவை செய்தார். வேதம் போதிக்கும்படி தென் அமெரிக்காவிற்கு புறப்பட்டார். பனாமாவுக்குத் தெற்குத் திசையில் கப்பல் மூழ்கியது. இவர் தப்பித்து பெருநாட்டில் உள்ள லீமா நகருக்குச் சென்றார். 20 ஆண்டுகளாக உழைத்து அநேகரை மனம் திருப்பினார். வேறு மூன்று நாடுகளிலும் வேதம் போதித்தார். பரித்தியாகங்கள் செய்ய இவர் பின் வாங்கியவர் அல்ல. ஆபத்துக்களையும், களைப்பையும் பொருட்படுத்தாமல் செய்யும்படி கடின மொழிகளையும் கற்றுக்கொண்டார். வாத்தியக் கருவிகளை வாசித்து மக்களின் அன்பைக் கவர்ந்தார். இவர் “புதிய உலகின் புதுமை வள்ளல்” என்று அழைக்கப்படுகிறார்.

**சிந்தனை:** இப்புனிதரைப்போல் மக்களைக் கடவுளிடம் கொண்டு வர நமது செல்வாக்கையும் திறமையையும் பயன்படுத்துவோம்.

**செபம்:** ஆண்டவரே, உமது கொடைகளை நாங்கள் பயன்படுத்தி ஏராளமாக கனி கொடுக்கும் வரம் தாரும்.